www.Padasalai.Net www.TrbTnpsc.com

# குகை மேல்நிலைப் பள்ளி

## சேலம் – 636 006

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# வணிகவியல்

பாடம் 1 – 28

ஒரு மதிப்பெண் வினா – விடை

PREPARED BY

G.PRAKASH. M.COM. M.PHIL. B.ED. D.TED

GUGAI HR.SEC. SCHOOL. SALEM -6

CONTACT - 9488270034

## 01. மேலாண்மை செயல்முறைகள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. மேலாண்மை என்பது ---- ன் செயல் ஆகும்

அ. மேலாளர் ஆ. கீழ்ப்பணியாளர். இ).மேற்பார்வையாளர் ஈ. உயரதிகாரி

2. மேலாண்மை என்பது ஒரு ----

அ. கலை ஆ. கலை மற்றும் அறிவியல்

இ. அறிவியல் ஈ. கலை அல்லது அறிவியல்

3. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்

அ. ஃபோயல் ஆ. டேலர் இ. மேயோ ஈ. ஜேக்கப்

4. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை --- என்பர்.

அ. ஒழுங்கு ஆ. பயன்பாட இ. வேலைப்பகிர்வு ஈ. சமத்துவம்

5. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு

அ. அதிகம் ஆ. குறைவு இ. பன்மடங்கு ஈ. கூடுதல்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–அ | 2–இ | 3–ஆ | 4–இ | 5–ஆ |

## 2. மேலாண்மை செயல்பாடுகள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. மேலாண்மை செயல்பாடுகளில் முதன்மையானது எது ?

அ. புதுமைப்படுத்துதல் ஆ. கட்டுப்படுத்துதல்

இ. திட்டமிடுதல் ஈ. முடிவெடுத்தல்

2. பின்வருவனவற்றுள் எது முக்கிய செயல்பாடு அல்ல ஃ

அ. முடிவெடுத்தல் ஆ. திட்டமிடுதல்

இ. ஒழுங்கமைத்தல் ஈ. பணிக்கமர்த்துதல்

3. வேலைப்பகிர்வு குழு வாரியாக அல்லது பிரிவு வாரியாக உள்ளது ---- எனவும் அழைக்கப்படுகிறது.

அ. ஒருங்கிணைத்தல் ஆ.கட்டுப்படுத்துதல்

இ. பணிக்கமர்த்துதல் ஈ. ஒழுங்கமைத்தல்

4. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது ?

அ. திட்டமிடுதல் ஆ. ஒழுங்கமைத்தல்

இ. பணிக்கமர்த்துதல் ஈ. கட்டுப்படுத்துதல்

விடைகள்

| 1–இ | 2–அ | 3–ஈ | 4–ஈ |
|---|---|---|---|

## 3. குறியிலக்கு மேலாண்மை விதிவிலக்கு மேலாண்மை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. ––– முறை தனிப்பட்ட வலிமை மற்றும் பொறுப்பிற்கு முழு வடிவம் கொடுக்கிறது.

அ. குறியிலக்கு மேலாண்மை ஆ. விதிவிலக்கு மேலாண்மை

இ. முதுகலை வணிக மேலாண்மை ஈ. முதுகலை வணிக நிர்வாகம்

2. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது ?

அ. முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது

ஆ. நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது

இ. குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

ஈ. அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது.

3. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் வாய்ப்புகளையம் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க ––– உதவுகிறது.

அ. முதுகலை வணிக நிர்வாகம் ஆ. விதிவிலக்கு மேலாண்மை

இ. முதுகலை வணிக மேலாண்மை ஈ. குறியிலக்கு மேலாண்மை

4. ––––– உதவியால் அதிகாரப்பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.

அ. முதுகலை வணிக நிர்வாகம் ஆ. விதிவிலக்கு மேலாண்மை

இ. முதுகலை வணிக மேலாண்மை ஈ. குறியிலக்கு மேலாண்மை

விடைகள்

| 1–அ | 2–ஈ | 3–ஆ | 4–இ |
|---|---|---|---|

## 04. நிதிச்சந்தை

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. நிதிச்சந்தை வணிகநிறுவனங்களுக்கு–––––––––– உதவுகிறது

அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களைதேர்வு செய்வதற்கு

இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

2. மூலதனச்சந்தை என்பது ---------- க்கான ஒரு சந்தை ஆகும்

அ) குறுகிய காலநிதி ஆ) நடுத்தரகாலநிதி

இ) நீண்டகாலநிதி ஈ) குறுகிய காலநிதி

3. முதல் நிலைச்சந்தை ---------- எனவும் அழைக்கப்படுகிறது

அ) இரண்டாம் நிலைச்சந்தை ஆ) பணச்சந்தை

இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகசந்தை

4. உடனடிச்சந்தை என்பது நிதிக் கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் ------------ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்

அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில்

இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

5. ஒரு இரண்டாம் நிலைச்சந்தையில் ஒரு பத்திரம் எத்தனைமுறைவிற்கப்படலாம்

அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை

இ) மூன்று முறை ஈ) பலமுறை

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–அ | 2–இ | 3–இ | 4–அ | 5–ஈ |

## 05. மூலதனச் சந்தை

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. மூலதன சந்தை --- ஐ வழங்குவதில்லை

அ. குறுகிய கால நிதி ஆ. கடனுறுதி பத்திரங்கள்

இ. சமநிலை நிதி ஈ. நீண்ட கால நிதி

2. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ. 1990 ஆ.1992 இ.1998 ஈ. 1997

3. முதல்நிலைச் சந்தை என்பது ஈடுகளை --- முறை வியாபாரம் செய்யும் ஒரு சந்தை ஆகும்.

அ. முதன் முறை ஆ. இரண்டாம் முறை இ. மூன்றாம் முறை ஈ. பலமுறை

4. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ---- ஆவர்

அ. தனிநபர் ஆ. நிறுமங்கள்

இ. நிதிநிறுவனங்கள் ஈ. மேலே உள்ள அனைத்தும்

5. இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பிணையம் எத்தனை முறை விற்கப்படலாம்.

அ. ஒரே ஒரு முறை ஆ. இரண்டு முறை

www.Padasalai.Net www.TrbTnpsc.com

இ. மூன்று முறை ஈ. பல முறை

விடைகள்

| 1–அ | 2–ஆ | 3–அ | 4–ஈ | 5–ஈ |
|---|---|---|---|---|

## 06. பணச்சந்தை

I சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. அழைப்பு பணச்சந்தையில் முதலீடு செய்யும் பணத்திற்கு__________ உடன் அதிக நீர்மத் தன்மையை வழங்குகிறது.

அ) வரையறுக்கப்பட்ட இலாபத்தன்மை ஆ) உயர்இலாபத்தன்மை

இ) குறைந்தஇலாபத் தன்மை ஈ) நடுத்தரஇலாபத் தன்மை

2. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு __________

அ) வணிகவங்கி ஆ) இந்திய ரிசர்வ்வங்கி

இ) பாரதஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

3. பணச்சந்தை வழங்குவது _________

அ) நடுத்தர கால நிதிகள் ஆ) குறுகியகாலநிதிகள்

இ) நீண்ட கால நிதிகள் ஈ) பங்குகள்

4. பணச்சந்தை நிறுவனங்கள்_________ ஆகும்.

அ) முதலீட்டு அமைப்புகள் ஆ) அடமானக் கடன்வங்கிகள்

இ) ரிசர்வ்வங்கி ஈ) வணிக வங்கிகள் மற்றும் தள்ளுபடியகம்

5. பணச்சந்தையில் இடர்என்பது ____________

அ) அதிகம் ஆ) சந்தை இடர்

இ) குறைந்தகடன்மற்றும் சந்தை இடர் ஈ) நடுத்தரஇடர்

6. குறுகிய கால நிதி ஆதாரங்களை ஏற்படுத்துவதற்காக பணச்சந்தையில் நிறும அமைப்புகள் வெளியிடும் கடன் ஆவணங்கள்________ என்று அழைக்கப்படுகிறது.

அ) கருவூலஇரசீதுகள் ஆ) வணிகத் தாள்

இ) வைப்புச்சான்றிதழ் ஈ) அரசுப்பத்திரங்கள்

7. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை______ என்று அழைக்கலாம்.

அ) வணிகத்தாள்சந்தை ஆ) கருவூலஇரசீது சந்தை

இ) வணிகஇரசீது சந்தை ஈ) மூலதனச்சந்தை

8. சந்தைப்படுத்தக் கூடிய உரிமையியலான ஆவணம், கால முறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை ________ என்று குறிப்பிடுகிறோம்.

அ) கருவூலஇரசீது ஆ) வைப்புச்சான்றிதழ்

இ) வணிகஇரசீது இ) அரசுப்பத்திரங்கள்

9. கருவூலஇரசீது ஆணை என்பது _______ உடையது.

அ) அதிக நீர்மைத் தன்மை ஆ) குறைந்த நீர்மைத் தன்மை

இ) நடுத்தர நீர்மை த்தன்மை ஈ) வரையறுக்கப்பட்ட நீர்மைத் தன்மை

10. அரசுப்பத்திரங்கள்__________ போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அ) மத்திய அரசு ஆ) மாநிலஅரசுகள்

இ) பகுதி அரசு அமைப்புகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–அ | 3–ஆ | 4–ஈ | 5–இ | 6–ஆ | 7–இ | 8–ஆ | 9–அ | 10–ஈ |

## 07. பங்கு மாற்றகம்

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும்:

1. ________ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.

அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை

இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

2. நாட்டில் __________ பங்குச் சந்தைகள் உள்ளன.

அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

3. பங்கு பரிமாற்றகங்கள் பரிவர்த்தனை செய்வது _________ ஆகும்.

அ) சரக்குகள் ஆ) சேவைகள்

இ) நிதி ஆவணங்கள் ஈ) நாட்டின் செலவாணி

4. பங்குச் சந்தை________ வியாபாரத்தை அனுமதிக்கிறது.

அ) நிறுவனங்களின் அனைத்து வகையிலான பங்குகள்

ஆ) அரசாங்கம் வெளியிடும் பத்திரங்கள்

இ) பட்டியலிடப்பட்டபத்திரங்கள்

ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

5. தரகர்கள் பங்குச்சந்தையில் ஈடுபடுவது

அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக

ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக

இ) மற்ற தரகர்களுக்காக

ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

6. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்

அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

7. நம்பிக்கையுள்ளவணிகர் என்பவர்

அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

8. வணிகர் நம்பிக்கையூட்டுவது ______________

அ) விலைஏற்றம் ஆ) விலைகுறைப்பு

இ) விலைநிலைத்தன்மை ஈ) விலையில் மாற்றமில்லை

9. பத்திரங்கள் வாங்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்படும் விலைபதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படுவது ________ ஆகும்.

அ) சந்தை மேற்கோள்கள் ஆ) வணிக மேற்கோள்கள்

இ) வியாபார மேற்கோள்கள் ஈ) வாங்குவோர் மேற்கோள்கள்

10. விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை பங்குச் சந்தைக்காக ஏற்படுத்தித் தரும் அமைப்பு _______ ஆகும்.

அ) ரிசர்வ்வங்கி ஆ) மத்திய அரசு இ) செபி ஈ) மும்பை பங்குச் சந்தை

www.Padasalai.Net www.TrbTnpsc.com

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–அ | 3–இ | 4–இ | 5–ஆ | 6–ஆ | 7–அ | 8–அ | 9–அ | 10–இ |

## 08. இந்திய பத்திர மாற்றக வாரியம் (செபி)

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ___________

அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

2. செபியின் தலைமையகம் _________ ஆகும்.

அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

3. இந்தியாவில் மூலதனச் சந்தையைகட்டுப்படுத்தஎந்தஆண்டு செபி அமைக்கப்பட்டது.

அ) 1988 ஆ) 1992 இ) 2014 ஈ) 2013

4. கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் __________ எனப்படுகிறது.

அ) பரஸ்பர நிதிகள் ஆ) பட்டியல்

இ) மறுபுறத் தோற்றமற்ற பத்திரங்கள் ஈ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்

5. ஒவ்வொரு பங்குச்சந்தையின் ஆட்சிக் குழுவில் __________ உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு நிதி அமைச்சகம் செபியிடம் அதிகாரம் அளிக்கிறது.

அ) 5 ஆ) 3 இ) 6 ஈ) 7

6. காகித வடிவிலான பங்குகளைமின்னணு வடிவில் மாற்றுவதற்கான செயல்முறை_______ ஆகும்.

அ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஆ) பட்டியலில் இருந்து விலக்குதல்

இ) புறத்தோற்றம் உள்ளபத்திரங்கள் ஈ) தடையுள்ளபத்திரங்கள்

7. தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்ற மற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ______ ஆகும்.

அ) ஜனவரி 1996 ஆ) ஜீன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

8. புறத்தோற்றமற்ற வடிவில் பத்திர விற்பனையைத் தொடங்கிய முதல் நிறுவனம் _____ ஆகும்.

அ) டாடா தொழில் நிறுவனம் ஆ) ரிலையன்ஸ் தொழில் நிறுவனம்

இ) இன்போசிஸ் ஈ) பிர்லா தொழில் நிறுவனம்

9. பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளர்களுக்கு உதவுவது _______ ஆகும்.

அ) பரஸ்பர நிதி ஆ) பங்குகள்

இ) கடனீட்டுப் பத்திரங்கள் ஈ) நிலைவைப்புகள்

10. PAN என்பதன் விரிவாக்கம் ________ ஆகும்.

அ) நிரந்தர தொகை எண் ஆ) முதன்மைகணக்கு எண்

இ) நிரந்தர கணக்கு எண் ஈ) நிரந்தர கணக்கு வாரிசு

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–ஆ | 3–அ | 4–ஈ | 5–ஆ | 6–அ | 7–இ | 8–ஆ | 9–அ | 10–இ |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## 09. மனித வள மேம்பாட்டின் அடிப்படைகள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. மனித வளம் என்பது ஒரு --- சொத்து

அ. கண்ணுக்கு புலனாகும் ஆ. கண்ணுக்கு புலனாகா

இ. நிலையான ஈ. நடப்பு

2. மனித வள மேலாண்மை என்பது ---- மற்றும் --- ஆகும்

அ. அறிவியல் மற்றும் கலை ஆ. கோட்பாடு மற்றும் நடைமுறை

இ. வரலாறு மற்றும் புவியியல் ஈ. மேலே குறிப்பிட்ட ஏதுமில்லை

3. திட்டமிடல் என்பது ----- செயல்பாடு ஆகும்.

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ. பரவலான

இ. அ மற்றும் ஆ இரண்டும் ஈ. மேலே உள்ள ஏதுமில்லை

4. மனித வள மேலாண்மை --- உறவினை நிர்ணயிக்கிறது.

அ.அக,புற ஆ. முதலாளி, தொழிலாளி

இ. உரிமையாளர், வேலைக்காரன் ஈ. முதல்வர், முகவர்

5. பணியாளர் சுழற்சி வீதம் என்பது நிறுவனத்தில் பணியாளர்களின் நிலை --- பொழுது ஏற்படுகிறது.

அ. நிறுவனத்திற்குள் உள்ளே வரும் இ. சம்பள பிரச்சனை

ஆ. நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும் ஈ. மேலே குறிப்பிட்ட ஏதுமில்லை

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–ஆ | 2–அ | 3–ஆ | 4–ஆ | 5–ஆ |

## 10. ஆட்சேர்ப்பு முறைகள்

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும்:

1. ஆட்சேர்ப்பு என்பது _____________ அடையாளம் காண்பதற்கானசெயல்முறைஆகும்.

(அ) சரியான வேலைக்கு சரியான நபர் (ஆ) நன்கு செயலாக்குபவர்

(இ) சரியான நபர் (ஈ) குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை.

2. ஆட்சேர்ப்பு என்பது ___________ மற்றும் ___________ க்கு இடையே பாலமாக இருக்குகிறது.

(அ) வேலை தேடுபவ ர்மற்றும் வேலை வழங்குநர்

(ஆ) வேலை தேடுபவர் மற்றும் முகவர்

(இ) வேலை வழங்குநர் மற்றும் உரிமையாளர்

(ஈ) உரிமையாளர் மற்றும் வேலைக்காரன்.

3. விளம்பரம் என்பது ஒரு ___________________ ஆட்சேர்ப்பு வளமாகும்.

(அ) அக வளங்கள் (ஆ) புறவளங்கள்

(இ) முகவர் (ஈ) புறத்திறனீட்டல்

4. பணி மாற்றம் என்பது ஒரு ___________________ ஆட்சேர்ப்பு வளமாகும்.

(அ) அக வள (ஆ) புறவள

(இ) புறத்திறனீட்டல் (ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை.

5. இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது ______________ மூலமே சாத்தியம்.

(அ) கணினி (ஆ) இணையம்

(இ) அகன்ற வரிசை (ஈ) 4 ஜி

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–அ | 2–அ | 3–ஆ | 4–அ | 5–ஆ |

## 11. பணியாளர் தேர்ந்தெடுத்தல்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. சரியான முறையிலான நபர்களை இலக்காகக் கொண்ட ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தல் செயல்முறை**

அ). சரியான நபர்கள் ஆ) சரியான நேரத்தில்

இ) சரியான செயல்களை செய்வதற்கு ஈ) மேற்சொன்ன அனைத்தும்

**2. சரியான நபரைத் தேர்ந்தெடுக்கபட்டவில்லையெனில் மற்றும் மேற்பார்வைக்கு கூடுதல் செலவை செய்ய வேண்டியிருக்கம்.**

அ) பயிற்சி ஆ). ஆட்சேர்ப்பு இ) வேலைத்தரம் ஈ) இவை எதும் இல்லை

**3. ––– வேலை அடையாளம் மற்றும் ஈர்ப்பதில் செயல்முறை குறிக்கிறது என்று குறிக்கிறது.**

அ) தேர்வு ஆ) பயிற்சி இ) ஆட்சேர்ப்பு ஈ) தூண்டுதல்

**4. தேர்வு பொதுவாக ஒரு ––– செயலாக கருதப்படுகிறது.**

அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை எதும இல்லை

**5. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதில் பின்வருவனவற்றில் எவை பல்வேறு பண்புகளை அளவிட பயன்படுகிறது வேட்பாளர்கள்?**

அ)உடல் பரிசோதனை ஆ) சைக்காலஜிக்கல் டெஸ்ட்

இ) அணுகுமுறை டெஸ்ட் ஈ) நிபுணத்துவம் சோதனைகள்

**6. பின்வரும் உத்தரவுகளில் எந்த ஒரு பொதுவான தேர்வு செயல்முறை பின்பற்றப்படுகிறது.**

அ) ஒரு விண்ணப்பபடிவம சோதனை அல்லது பேட்டி, குறிப்பு சோதனை மற்றும் உடல் பரிசோதனை

ஆ) விண்ணப்ப படிவம் சோதனை மற்றும் நேர்காணல் குறிப்பு சீராய்வு மற்றும் உடல் பரிசோதனை

இ) கேட்ச் குறிப்பு, விண்ணப்ப படிவம், சோதனை மற்றும் நேர்காணல் மற்றும் உடல் பரிசோதனை

ஈ) உடல் பரிசோதனை பரிசோதனை மற்றும் பேட்டி விண்ணப்ப கால மற்றும் குறிப்பு காசோலை

7. **நிரப்படாத விண்ணப்பத்தின் நோக்கம் _______ பற்றிய தகவல்கள் சேகரிப்பதற்காகும்.**

அ) நிறுமம் ஆ) விண்ணப்பதாரர

இ) வினா:ஃநேர்காணல் அட்டவனை ஈ) போட்டியாளர்கள்

8. **ஒரு உள்ளார்ந்த திறனை கண்டறிய கருவியாக செயல்படும் சோதனை அடையாளம்**

அ) தகுதி பரிசோதனை ஆ) மன்பான்மை பரிசோதனை

இ) நிபுணத்துவம் பரிசோதனை ஈ) உடல் பரிசோதனை

9. **பொருத்தமற்ற வேட்பாளரை நீக்குவதற்கான செயல்முறை --- என அழைக்கப்படுகிறது.**

அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

10. **விண்ணப்ப பரிசிலனையானது**

அ)தேர்ந்தெடுத்தலின் கடைசி நிலை ஆ)தேர்ந்தெடுத்தலின் முதல்நிலை

இ) தேர்ந்தெடுத்தலின் மூன்றாம் நிலை ஈ) இவற்றில் எதும் இல்லை

11. **தேர்ந்தெடுத்தல் செயல்முறையானது**

அ) விண்ணப்பதாரரின் இடவமைப்புக்கு உதவுகிறது

ஆ) விண்ணப்பதாரரின் தகுதியை தீரமாணிக்கிறது

இ) பணியாள்ரை பயிற்சிக்கு தயாராக்குதல்

ஈ) இவற்றில் எதுவும் இல்லை.

12. **சரியான மனிதனை சரியான வேலையில் வைப்பது என்பது**

அ) பயிற்சி ஆ) பணியமர்த்தல் இ) பதவிஉயர்வு ஈ) மாற்றம்

13. **தகுதிகான் காலம்**

அ) ஒன்று முதல் இரண்டு ஆண்டு வரை ஆ) ஒன்று முதல் மூன்று ஆண்டு வரை

இ) இரண்டு ஆண்டு முதல் நான்கு ஆண்டு வரை ஈ) இவற்றில் எதும் இல்லை

14. **முதலில் வேலை, அடுத்து மனிதர் என்பது ஒரு ---- கோட்பாடு**

அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–ஈ | 2–அ | 3–இ | 4–ஆ | 5–ஆ | 6–ஆ | 7–ஆ | 8–அ | 9–ஆ | 10–ஆ |
| 11–ஆ | 12–ஆ | 13–அ | 14–ஈ | | | | | | |

## 12. பணியாளர் பயிற்சி முறை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. பணிவழி பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?**

(அ) வகுப்பறையில் (ஆ) தொழிற்சாலைக்கு வெளியே

(இ)வேலையில்லா நாட்களில் (ஈ) விளையாட்டு மைதானத்தில்

**2. தொழிற்சாலைக்குள் பயிற்சி எங்கு வழங்கப்படுகிறது?**

(அ) வேலையிடத்தில் (ஆ) அறையில்

(இ) பயிற்சி திணைக்களத்தில் (ஈ) குழுவினால்

**3. பின்வருவனவற்றில் எவை சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை மேம்படுத்துகிறது?**

(அ). பயிற்சி (ஆ). தேர்ந்தெடுப்பு

(இ). ஆட்சேர்ப்பு (ஈ). செயல்திறன் மதிப்பீடு

**4. பயிற்சி பெறுபவர் உயர் அதிகாரி அல்லது மூத்த தொழிலாளர்களுக்கு மிகவும் நெருக்கமானவராக இருக்கும் முறை**

(அ) தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை (ஆ) புதுப்பிக்கும் பயிற்சி

(இ) பங்கு நாடகம் (ஈ) தொழிற் பயிற்சி முறை

**5. -------- ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.**

(அ) பயிற்சி (ஆ) வேலைபகுப்பாய்வு (இ) தேர்வு (ஈ) ஆட்சேர்ப்பு

**6. பயிற்சி முறைகளை-------- பயிற்சி எனவகைப்படுத்தலாம்.**

(அ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல் (ஆ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி

(இ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு (ஈ) உடல் மற்றும் மனம்

**7. -------- ஒரு குறிப்பிட்ட வேலையை செய்ய ஒரு ஊழியர் திறனை மேம்படுத்த உதவுகிறது.**

(அ) வாசிப்புகள் (ஆ) குழு (இ) வேலைவாய்ப்பு (ஈ) பயிற்சி

**8. குறிப்பிட்ட தலைப்பில் விரிவான கலைந்துரையாடல் --------**

(அ) ஆய்வின் கீழ்பயிற்சி (ஆ) பயிற்சியளிப்பு (இ) மாநாடுகள் (ஈ) ஆலோசனை

விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–இ | 3–அ | 4–ஈ | 5–அ | 6–ஆ | 7–ஆ | 8–இ |

## 13. சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்

**I. சரியானவிடையைத் தேர்ந்தெடு:**

**1. கண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்.**

அ) விற்பனையாளர் ஆ) சந்தையிடுகையாளர்

இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

**2. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது.**

அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்

இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

**3. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.**

அ) பொருட்கள் ஆ)பரிவர்த்தனை

இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

**4. கீழ்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.**

அ) பங்கு சந்தை ஆ) தயாரிப்பு பொருள் சந்தை

இ) உள்ளூர் சந்தை ஈ) குடும்பசந்தை

**5. பங்கு பரிவர்த்தனை சந்தை மேலும் இவ்வாறு அழைக்கப்படுகிறது.**

அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை

இ) பாதுகாப்பு சந்தை ஈ) தேசிய சந்தை

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–ஆ | 2–ஈ | 3–ஆ | 4–அ | 5–இ |

## 14. சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை

I. சரியானவிடையைத் தேர்ந்தெடு:

1. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை_____________

அ) முற்றுரிமைமுறை ஆ) பணத்திற்கு மாற்றுதல்

இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

2. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?

அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்

இ) மொத்தவிற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்.

3. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?

அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக்கூறு ஈ) விலைகூறு

4. சந்தையிடுகை கலவை என்பது சந்தையிடுகை திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள் __________ தேவை மற்றும் மன நிறைவு மூலம் லாபம் பெறுகிறது.

அ) மொத்தவிற்பனையாளர் ஆ) சில்லறை விற்பனையாளர்

இ) நுகர்வோர் ஈ) விற்பனையாளர்

5. கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?

அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–இ | 2–அ | 3–இ | 4–இ | 5–அ |

## 15. சந்தையிடுதல் நவீன போக்கு

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையை என்கிறோம்.

அ) பசுமை சந்தையிடுதல் ஆ) மின் சந்தையிடுதல்

இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்

2. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது

அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

3. மூகசந்தைப்படுத்துதல் என்பது _________ யுடன் தொடர்புடையது

அ) சமூகம் ஆ) சமூகவகுப்பு இ) சமூகமாற்றம் ஈ) சமூகதீமை

4. மூக ஊடக சந்தைப்படுத்துதலை சிறப்பாக செயல்படுத்துவது _______ மாற்று விகிதத்தை அதிகரிக்கும்.

அ) வாடிக்கையாளரிலிருந்து வாங்குபவராக

ஆ) சில்லறை வியாபாரிலிருந்து வாடிக்கையாளராக

இ) வாங்குபவரிலிருந்து மற்று ஒரு வாங்குபராக

ஈ) சந்தையாளருக்கு நேரடி தொடர்பு

5. ஒரு நிறுவனத்தின் பொருள் மற்றும் விலையை தெளிவாக பார்வைக்கு அளிக்கப்படுகிறது.

அ) வணிகவட்டி ஆ)இணைய தளங்கள்

இ) மின்னணு பட்டியல் ஈ) வருவாய் மாதிரி

6. கீழ்காணும் குழுவில் எந்தகுழு பசுமைவணிககருத்தைஅறிமுகம் செய்தது.

அ) ACME ஆ) டாட்டா இ) ரிலையன்ஸ் ஈ) ici

7. தூய சில்லரை விற்பனையாளர் என அழைக்கப்படுவர்

அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கைதரகர்கள்

இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1–ஆ | 2–இ | 3–இ | 4–இ | 5–அ | 6–இ | 7–அ |

## 16. நுகர்வோரியல்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு

அ. 1960 ஆ. 1957 இ.1954 ஈ. 1958

2. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார் ?

அ. மகாத்மா காந்தி ஆ. ஜான் எப். கென்னடி

இ. ரால்ப் நேடர் ஈ. ஜவஹர்லால் நேரு

3. பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1962 ஆ. 1972 இ. 1982 ஈ. 1985

4. அனைத்து வணிக நிறுவனங்களின் மிக முக்கிய முதன்மை நோக்கம்

அ. சேவை செய்வத ஆ. நல்ல வாழ்க்கைத்தரத்தை அளிப்பது

இ. சமுதாயத்திற்கு தேவையானவற்றை அளிப்பது ஈ. இலாபம் ஈட்டுவது

5. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்

அ. 01.01.1989 ஆ.01.04.1986 இ.15.04.1987 ஈ. 15.04.1990

6. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அ. ஆகஸ்டு 15. ஆ. ஏப்ரல் 15 இ. மார்ச் 15 ஈ. செப்டம்பர் 15

7. உரிய மறுபயன் அளித்து தனது சொந்த உபயோகத்திற்காகப் பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுக் கொள்ளும் நபர்

அ. வாடிக்கையாளர் ஆ. நுகர்வோர் இ. வாங்குபவர் ஈ. உபயோகிப்பவர்

8. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள் குறித்து தீர்மானம் இயற்றிய ஆண்டு

அ. 1985 ஆ. 1958 இ. 1986 ஈ. 1988

விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–இ | 3–இ | 4–ஈ | 5–இ | 6–இ | 7–ஆ | 8–அ |

## 17. நுகர்வோர் பாதுகாப்பு

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம்––––

அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்

இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்க சேவை

2. ––– என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.

அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி

இ) உற்பத்தியாளர் இ) சில்லறை வியாபரி

3. நுகர்வோரின் உரிமைகள் அவர்கள் கொண்டுள்ள நிலையில் ––– ஆகும்

அ) அளவீடுகள் ஆ) விற்பனை அதிகப்படுத்துதல்

இ) பொறுப்புகள் ஈ) கடமைகள்

4. ஜான் f.கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம் பெறாதவை எது.

அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை

இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

5. நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர பெற்றுள்ள ---- ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்.

அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை

இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–இ | 2–அ | 3–இ | 4–இ | 5–ஈ |

## 18. குறை தீர்ப்பு செயல்முறை

I **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார் ?

அ) இந்திய உச்ச நீதி மன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி

ஆ) பிரதம மந்திரி

இ) இந்தியத் தலைவர்

ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

2. மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர் யார் ?

அ) உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஆ) முதலமைச்சர்

இ) நிதி மந்திரி ஈ) மேலே குறிப்பிட்ட எதுவுமில்லை

3. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார் ?

அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர்நீதிமன்ற நீதிபதி

இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேலே குறிப்பிட்ட எதுவுமில்லை

4. பொருட்களின் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றிற்கு அதிகாக இருந்தால் மாநில ஆணையம் புகார் தெரிவிக்கலாம்

அ) 2 இலட்சம் ரூ. 5 லட்சம் ஆ) 20 லட்சம் ஆனால் 1 கோடிக்கு மேலில்லை

இ)3 லட்சம் ஆனால் ரூ.5 லட்சம் ஈ) 4லட்சம் ஆனால் 20 லட்சம் ரூபாய் இல்லை

www.Padasalai.Net www.TrbTnpsc.com

5. தேசிய நுகர்வோர் பிரச்சினைகள் குறைபாடு ஆணையம், பொருட்களின் மதிப்பு குறைக்கப்படுதல் மற்றும் இழப்பீடு, ஏதாவது இருந்தால்

அ) ரூ.1 கோடி அதிகரிக்கிறது ஆ) 10 லட்சம் ரூபாய்

இ) ரூ 5 லட்சம் அதிகரிப்பு ஈ) 12 லட்சம் ரூபாய்

6. மாவட்ட மன்றம் பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றைக் குறைவாகக் கூறினால் புகார் தெரிவிக்கலாம்.

அ) 1000000 ஆ) க்கு கீழே 2000000

இ) 4000000 க்கு கீழே ஈ) 50 லட்சம்

7. நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு முதன்முதலில் நிறுவப்பட்டது

அ) 19680 ஆ) 1965 இ) 1967 ஈ) 1987

8. நுகர்வோர் விழிப்புணர்வு பின்வருமாறு உள்ளடக்கியது.

அ) அதிகபட்ச சில்லறை விலை பற்றிய நுகர்வோர் விழிப்புணர்வு

ஆ) நியாயமான விலை கடை பற்றி நுகர்வோர் விழிப்புணர்வு

இ) கேட்ச் விலை தரம மற்றும் காலாவதி தேதி பற்றிய நுகர்வோர் விழிப்புணர்வு

ஈ) மேலே உள்ள அனைத்தும்

9. புகார்கள் கூட தாக்கல் செய்யப்படலாம்

அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு

இ) நுகர்வோர் குழு ஈ) மேலே உள்ள அனைத்தும்

10 நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டும்

அ) தயாரிப்புகளின் குறைபாடுகள்

ஆ) ஒழுங்கற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வணிக நடைமுறைகள்

இ) மேலே சொன்ன அனைத்தும்

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–அ | 3–அ | 4–ஆ | 5–அ | 6–ஆ | 7–அ | 8–ஈ | 9–ஈ | 10–ஈ |

## 19. சுற்றுச்சூழல் காரணிகள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. VUCA______, ________, _______, ______.

அ) மதிப்பு நிச்சயமின்மைசிக்கலானது தெளிவில்லாதது

ஆ) மதிப்பு தவிர்க்கஇயலாதது நிறும மற்றும் அதிகாரம்

இ) மாற்றம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது நிறுமம் ஏலம்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. ஜி.எஸ்.டி. என்பது________, _______, _______.

அ) சரக்கு மற்றும் வெற்றிவரி

ஆ) சரக்கு மற்றும் சேவைவரி

இ) சரக்கு மற்றும் விற்பனைவரி

ஈ) சரக்கு மற்றும் ஊதியவரி

3. ஒரு நிறுவனத்திற்குள் உள்ளகாரணிகள் _______சூழல்ஆகும்.

அ) அக சிந்தனையாளர் ஆ) புற நோக்கியான்

இ) சக மனிதர்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. வணிகத்தின் பரந்த சூழல்ஒரு ________ காரணியாகும்

அ) கட்டுப்படுத்த முடியாது ஆ) கட்டுப்பட்டிருக்கு உட்பட்டது

இ) சமாளிக்ககூடியது ஈ) சமாளிக்கமுடியாதது

5. இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள்_____மற்றும்_____ஆகும்.

அ) அகம் மற்றும் புறம் ஆ) உட்புறம் மற்றும் வெளிப்புறம்

இ) நல்லது மற்றும் கெட்டது ஈ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாதது

6. ________ சூழலில் வானிலை மற்றும காலநிலை நிலைமைகள் உள்ளன.

அ) நுண்தன்மை கொண்டது ஆ) பேரியல் தன்மை கொண்டது

இ) குறைந்த பட்சமானது ஈ) அதிகபட்சமானது

விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1–அ | 2–ஆ | 3–அ | 4–அ | 5–ஆ | 6–ஆ |

## 20. தாராளமயமாக்கல் , தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. ____________ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.

(அ) உலகமயமாக்கல் (ஆ) தனியார் மயமாக்கல்

(இ) தாராளமயமாக்கல் (ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

2. _____________ என்பது தனியார் துறைக்கு முன்னர் பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும்.

(அ) தாராளமயமாக்கல் (ஆ) தனியார்மயமாக்கல்

(இ) உலகமயமாக்கல் (ஈ) பொது நிறுவனம்

3. ______________ உரிமைகள் சர்வதேச மட்டத்தில் வலுவான அஸ்திவாரத்தின் காரணமாக தைரியமான மேலாண்மை முடிவுகளை எடுக்கின்றன.

(அ) தனியார் (ஆ) பொது (இ) கார்ப்பரேஷன் (ஈ) MNC

4. ____________ பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

(அ) தனியார்மயமாக்கல் (ஆ) தாராளமயமாக்கல்
(இ) உலகமயமாக்கல் (ஈ) வெளிநாட்டு வர்த்தகம்

5. புதிய பொருளாதாரக் கொள்கை ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது _______.
(அ) 1980 (ஆ) 1991 (இ) 2013 (ஈ) 2015

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–இ | 2–ஆ | 3–அ | 4–இ | 5–ஆ |

## 21. சரக்கு விற்பனைச் சட்டம்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்டஆண்டு
அ. 1940 ஆ. 1997 இ. 1930 ஈ. 1960

2. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ. இருதரப்பினர் ஆ. சொத்துரிமை மாற்றம் இ. விலை ஈ. அனைத்தும்

3. சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளை உள்ளடங்கியது?
அ. சரக்கிருப்பு ஆ. வரவேண்டிய பங்காதாயம் இ. பயிர் ஈ. தண்ணீர்

4. விற்பனை ஒப்பந்தத்தில் யாருக்கு உரிமைஉண்டு?
அ. வாங்குனர் ஆ. விற்பவர்
இ. வாடகைக்கு எடுப்பவர் ஈ. அனுப்பப்பெற்றவர்

5. பொருளின் மீதான உரிமை என்பது
அ. பொருளின் உடைமை
ஆ. பொருளைப் பாதுகாத்தல்
இ. பொருளின் மீதான அனுபவ பாத்தியம் வைத்திருப்பவர்
ஈ. இவற்றில் ஏதுமில்லை

6. அறுதியிடப்படாத பொருளைப் பொறுத்தவரை வாங்குநருக்கு எப்போது உரிமை மாறுகிறது?
அ. அறுதியிடப்பட்டபின்பு
ஆ. ஒப்பந்தத்தின் பேரில் சரக்கினை ஒதுக்கி வைக்கும் போதும்
இ. நிறையிட்டு அளந்த பிறகு
ஈ. அ மற்றும் ஆ

7. குறிப்பிட்டசரக்கு என்பது விற்பனையின்எந்தக் காலகட்டத்தில் உள்ளசரக்கைக் குறிக்கிறது?
அ. உடன்பாடு போகும்போது
ஆ. ஒப்பந்தம்
இ. ஆணையைப் பெறும் போது
ஈ. விற்க கடமைப்பட்ட போது

8. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவகை சரக்கிற்குப் பொருளின் மீதான உரிமை மாறி விடுகிறது.
அ. சரக்கினை அறுதியிட்டுக் கூறும்போது
ஆ. சரக்கை ஒப்பந்தத்தின் பேரில் எடுத்து வைக்கும் போது
இ. பொதுச் சரக்கேற்றியிடம் ஒப்படைத்த பிறகு
ஈ. விற்பனை அல்லது திருப்பம் அடிப்படையில் அனுப்பும்போது

9. ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருக்கும் நிபந்தனை.

அ. நம்புறுதி ஆ. நிபந்தனைகள் இ. உரிமை ஈ. உடன்பாடு

10. விலைபெறாத வணிகர் கீழ்க்குறிப்பிட்டுள்ள எந்த தகு நிலையில் சரக்கினை வைத்திருக்கும் போது பற்றுரிமை செலுத்த முடியும்.

அ. பொருளின்உரிமையர் ஆ. வாங்குநரின்முகவர்

இ. வாங்குநரிடம் ஒப்படைக்கப்பட்டவை ஈ. மேற்கூறிய அனைத்து தகுநிலையிலும்

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–இ | 2–ஈ | 3–ஆ | 4–ஆ | 5–இ | 6–ஆ | 7–இ | 8–அ | 9–அ | 10–அ |

## 22. மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. மாற்று முறை ஆவணச் சடடம் எந்த ஆண்டு இயற்றப்படடது?

அ. 1981 ஆ. 1881 இ. 1994 ஈ. 1818

2. கீழ் குறிபபிடப்படடுள்ள எந்த ஆவணம் சாதாரணமாக கைமாற்றிக் கொள்வதன் மூலம் மாற்றிக் கொள்ள முடியும்

அ. ஆணை ஆவணம் ஆ. கொணர்பவர் ஆவணம்

இ. மேற்கூறிய இரண்டும் ஈ. மேற்கூறிய இரண்டும் இல்லை

3. மாற்றப் பெறுநர் யார்?

அ. ஆவணத்தை மாற்றுபவர் ஆ. யார் பெயரில் மாற்றப்படுகிறதோ அவர்

இ. பணம் பெறுபவர் ஈ. மேற்கூறிய எவரும் இல்லை

4. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் எத்தனை பேர்?

அ. 2 ஆ. 6 இ. 3 ஈ. 4

5. மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 பிரிவு 6 எதைப்பற்றி இயம்புகிறது?

அ. கடனுறுதிச் சீட்டு ஆ. மாற்றுச்சீட்டு

இ. காசோலை ஈ மேற்கூறிய எதுவுமில்லை

6. எது கொணர்பவர் பத்திரமாக இருக்க முடியாது ?

அ. காசோலை ஆ, கடனுறுதிச்சீட்டு

இ. மாற்றுச்சீட்டு ஈ. மேற்கூறிய ஏதுமில்லை

7. எந்த கீறல் மாற்றுமுறைத் தன்மையை தடுக்கிறது

அ செலவணிகத்தன்மை தடுக்கம் கீறல் ஆ. பெறுபவர் கணக்கு மட்டும் என்ற கீறல்

இ பொதுக்கீறல் ஈ. சிறப்பு கீறல்

8. எந்த வகை மேலெழுத்து மேலெழுதுபவரை மாற்றுமுறை ஆவண மறுப்பினால் எழும் பொறுப்பிலிருந்து விடுவிக்கின்றது.

அ. தடைப்படுத்துதல் ஆ. கடமைதவிர்

இ. பொறுப்புதவிர் ஈ. நிபந்தனை

9. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது.

அ. 3 மாதங்கள் ஆ. 5 மாதங்கள்

இ. 4 மாதங்கள் ஈ. 1 மாதங்கள்

10. எது சரக்கு உரிமை ஆவணம் அல்ல ?

அ. லாரி ரசீது ஆ. ரயில் ரசீது

இ. வான் ஊர்தி ரசீது ஈ. இடாப்பு

விடைகள்

| 1–ஆ | 2–ஆ | 3–ஆ | 4–இ | 5–இ | 6–இ | 7–அ | 8–ஆ | 9–அ | 10–ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## 23. தொழில் முனைவுக்கான அடிப்படைக்கூறுகள்

I சரியான விடையைத் தேர்ந்தெடு:

1 கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக் காரணி ?

அ. நிலம் ஆ. உழைப்பு

இ. தொழில்முனை ஈ. மேற்கூறிய அனைத்தும்

2. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது ?

அ. இடர்தாங்கி ஆ. புதுமைபடைப்பவர்

இ. ஊழியர் ஈ. அமைப்பாளர்

3. கீழ் குறிப்பிட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை ?

அ. துணிகர உணர்வு ஆ. நெளிவு சுளிவு

இ. தன்னம்பிக்கை ஈ. அனைத்தும்

4. கீழ் குறிப்பிட்டவைகளில் எது மேலாண்மைபணி அல்ல ?

அ. திட்டமிடல் ஆ. சந்தையிடல்

இ. அமைப்பாற்றல் ஈ. கட்டுப்பாடு காத்தல்

5. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் எது வணிகப் பணியை சார்ந்து இருக்காது ?

அ. கணக்கியல் பணி ஆ. ஒருங்கிணைப்பு

இ. வாய்ப்பை கண்டறிதல் ஈ. திட்டமிடல்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–ஈ | 2–ஆ | 3–ஈ | 4–இ | 5–அ |

## 24. தொழில் முனைவோர்களின் வகைகள்

I சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் முனைவோரில் பணிசாரா தொழில் முனைவோரைத் தேர்ந்தெடுக்க.

அ. புதினம் புனையும் தொழில் முனைவோர் ஆ. பாரம்பரிய தொழில் முனைவோர்

இ. காலங்கடந்தும் பழமைவாத தொழில் முனைவோர் ஈ. ஆண்தேனி தொழில் முனைவோர்

2. செயலூக்கம் சாராதொழில் முனைவோரை கண்டுபிடிக்க.

அ. தெளிவான தொழில் முனைவோர் ஆ.கூட்டுபங்கு நிறுமதொழில் முனைவோர்

இ. இயல்பான தொழில் முனைவோர் ஈ. தூண்டப்பட்ட தொழில் முனைவோர்

3. கீழ் குறிப்பிட்ட எந்த செயல் வியாபார தொழில் முனைவோரைச் சாராதது.

அ. உற்பத்தி ஆ. சந்தையிடுகை இ. செயல்பாடு ஈ. ஏதுமில்லை

4. வணிக தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறி.

அ. விற்பனை ஆ. கழிவு இ. வாங்கல் ஈ. தயாரிப்பு

5. கூட்டுப்பங்கு தொழில் முனைவோரின் வேறு பெயர்.

அ. அகத்தொழில் முனைவோர் ஆ. தோற்றுவிப்பாளர்

இ. மேலாளர் ஈ. பங்குநர்

6. கோழிப்பண்ணை. மலர்வணிகம். பழஉற்பத்தி போன்ற வகை செயல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட துறையில் எதனைச் சார்ந்த செயல்.

அ. கூட்டு ப்பங்கு நிறுமம் ஆ.சில்லறை வணிகம்

இ. வணிகம் ஈ.வேளாண்மை இயல்

7. புரியாத தொழில் முனைவோரைக் கண்டுபிடி

அ. உணவு விடுதி நடத்துபவர் ஆ. வங்கித் தொழில் செய்பவர்

இ. வான்வழி போக்குவரத்து செயல்பாட்டாளர் ஈ. கால்நடை பராமரிப்பாளர்

8. தெளிவான தொழில் முனைவோரின் நோக்கம்

அ. சேவைபுரிதல் ஆ. இலாபம் ஈட்டல்

இ. தகுநிலை எட்டுதல் ஈ. ஆ மற்றும்

9. கீழ் குறிப்பிடப்பட்டவையில் எது தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்டது

அ. நவீன தொழில் முனைவு

ஆ. தொழில் துவக்கும் மற்றும் வளர்க்கும் தொழில் முனைவு

இ. கூட்டுறவு தொழில் முனைவு

ஈ. தொழிற்சாலை தொழில் முனைவு

10. கீழ்குறிப்பிடப்பட்டுள்ளஎது காலம் தாழ்த்தும் பழமை விரும்பி தொழில் முனைவோருக்குப் பொருந்தும்

அ. பழமை பேணுவது ஆ. இடர் வெறுப்பது

இ. ஐயப்படுவது ஈ. மாற்றிக் கொள்வது

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–இ | 2–இ | 3–ஈ | 4–ஈ | 5–இ | 6–ஈ | 7–ஈ | 8–ஈ | 9–இ | 10–ஈ |

## 25. தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. அனைத்து இந்திய அரசாங்கங்களும் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய, இந்திய பொருளாதாரத்தை நவீனமயமாக்க_____________ முன் முயற்சி தொடங்கப்பட்டது.

அ) ஸ்டாண்ட் அப் இந்தியா ஆ)ஸ்டாட்டப் இந்தியா

இ) டிஜிட்டல் இந்தியா ஈ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

2. ______________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அ) டிஜிட்டல் இந்தியா ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

இ) ஸ்டாட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா

3. புதிது புனைதல் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு _________ முயற்சிக்கிறது.

அ) அடல் புதுமைபுகுத்தல் திட்டம்

ஆ) பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு

இ) விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி

ஈ) அடல் இன்புவேஷன் சென்டர்ஸ்

4. ______________ நிதி ஆதாரங்கள், தொழில் நுட்பஅறிவு, தொழிலாளர் ஆதாரங்கள் மற்றும் மூலப்பொருட்கள், சந்தைதிறன் மற்றும் இலாபகத்தன்மை ஆகியவற்றை ஆதாரங்களாகக் கொண்டிருக்கிறது.

அ) தொழில்நுட்ப ஆ)ஸ்டாட்டப் இந்தியா

இ) திட்டஅறிக்கை ஈ) வளர்ச்சி அறிக்கை

5. _________________ திட்ட அறிக்கையில் துஷ்பிரயோகம் செய்வதற்கான பொறிமுறையை உள்ளடக்கியது.

அ) வங்கியர் ஆ) அரசு

இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள் ஈ) தொழில் முனைவோர்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1–இ | 2–ஆ | 3–அ | 4–இ | 5–ஈ |

## 26. நிறுமச் சட்டம் 2013 – ஓர் அறிமுகம்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. ஒரு நிறுமம் கழகமாக மாற்ற வேண்டி பதிவு அலுவலகத்தின் பதிவாளரால் அறிக்கை அனுப்பிய _____________ மாறும்.

அ) 14 நாட்கள் ஆ) 21 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 60 நாட்கள்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

2. ஒரு நபரின் கருத்து மற்றும் எண்ணங்களின் வெளிப்பாட்டின் மூலம் நிறுமத்தை தோற்றுவித்தால் அவர் _____________

அ) இயக்குபவர் ஆ) நிறும செயலாளர் இ) பதிவாளர் ஈ) தோற்றுவிப்பாளர்

3. எந்த ஒரு முதலானது நிறுமம் பதிவு செய்யும் நேரத்தில் தொகையை செலுத்த வேண்டும்?

அ) பங்களிப்பு முதல் ஆ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

இ) செலுத்தப்பட்ட முதல் ஈ) வெளியீட்டு முதல்

4. கீழ்கண்ட பங்குகளில் எது முந்தைய பங்குதாரர்களின் துணைகொண்டு தனது நிறுமத்தின் முதலை உயர்த்த வெளியிடும் பங்கு _____________

அ) சாதாரணப்பங்குகள் ஆ) உரிமைப்பங்குகள்

இ) முன்னுரிமைப்பங்குகள் ஈ) ஊக்கப்பங்குகள்

5. ஒரு நிறுமத்தை கிராமத்தில் (அ) நகரத்தில் மாற்ற வேண்டும் எனப்பதிவு அலுவலகத்தில் அறிவிக்கும் அதிகாரம் உடையது _____________

அ) சாதாரண முடிவு ஆ) சிறப்பு முடிவு

இ) வாரிய முடிவு ஈ) அசாதாரண முடிவு

6. பங்குத் தொகுதியை_____________ நிறுமம் வெளியீடும்.

அ) பொது ஆ) தனியார் இ) ஒரு நபர் ஈ) சிறு

7. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்கீழ் வருவது _____________

அ) பங்குச் சான்றிதழ் ஆ) பங்கு

இ) பங்குரிமைஆணை ஈ) பங்குத்தொகுதி

8. முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள்_____________

அ) ஊக்கப்பங்குகள் ஆ) சாதாரணப்பங்குகள்

இ) உரிமைப்பங்குகள் ஈ) முன்னுரிமைப்பங்குகள்

9. முந்தைய பங்குதாரர்களுக்கு பங்குகளின் விலையை குறைத்து அவர்களுக்கு சாதகமாக வழங்குவது _____________

அ) ஊக்கப்பங்குகள் ஆ) சாதாரணப்பங்குகள்

இ) உரிமைப்பங்குகள் ஈ) முன்னுரிமைப்பங்குகள்

10. தற்போது உள்ள நிறுமச் சட்டம் 2013 கீழ்கண்டவற்றுள் பங்குகளை வெளியிடுவதில் எதை தடை செய்துள்ளது _____________

அ) முனைமம் ஆ) முகமதிப்பு

இ) தள்ளுபடி ஈ) இவற்றில் எதுவும் இல்லை

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1-இ | 2-ஈ | 3-ஆ | 4-ஆ | 5-ஈ | 6-அ | 7-இ | 8-அ | 9-இ | 10-இ |

## 27. நிறும மேலாண்மை

I சரியான விடையைத் தேர்ந்தெடு:

1 நிறுமச் சட்டம் 2013-ன்படி ஒரு நபர் இயக்குனராக___ நிறுமங்களுக்கு மேல் பதவி வகிக்ககூடாது

அ) 5 கம்பெனிகள் ஆ) 10 கம்பெனிகள் இ) 20 கம்பெனிகள் ஈ) 15 கம்பெனிகள்

2 நிதி நிறுமத்தால் நியமிக்கப்படும் இயக்குனர்

அ) பெயரளவு ஆ) கூடுதல் இ) மகளிர் ஈ) நிழல்

3 ஒரு தனியார் கம்பெனி குறைந்தது ___ இயக்குனர்கள் இருக்க வேண்டும்

அ) ஏழு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) இரண்டு

4 ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ___இயக்குனர்கள் இருக்க வேண்டும்

அ) 12 ஆ) 7 இ) 3 ஈ) 2

5 ஒரு பொது கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனம் ₹____ அல்லது அதற்கு மேல் இருக்கும் பொழுது சிறிய பங்குதாரர்களால் இயக்குனர் தேர்ந்தெடுக்கப்படலாம்.

அ) 1 கோடி ஆ) 3கோடி ₹ரூபாய்

இ) 5 கோடி ₹ரூபாய் ஈ) 7கோடி ₹ரூபாய்

6 தனி சட்டத்தின்படி கீழ்கண்ட அதிகாரங்களில் ஒன்று இயக்குனர்களின் குழுவால் செயல்படுத்த முடியும்

அ) கம்பெனியை விற்கும் அதிகாரம்

ஆ) அழைப்பு பணத்துக்கு அழைப்பு விடும் அதிகாரம்

இ) செலுத்தப்பட்ட மூலதனத்திற்கு மேல் கடன் வாங்கும் அதிகாரம்

ஈ) தணிக்கையாளர்களை மீண்டும் பதவி நியமனம் செய்யும் அதிகாரம்

7 _____ நியமிக்கும் இயக்குனர்கள் குறைந்த எண்ணிக்கையிலான பங்குகளை வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது

அ) மத்திய அரசு ஆ) கம்பெனி சட்ட வாரியம்

இ) கம்பெனி பொதுக்கூட்டம் ஈ) இயக்குனர்கள் குழு

8 இயக்குனர்கள் கம்பெனியின் பணத்திற்கு ___ ஆகிறார்கள் ஆனால் நிறுமத்துக்கு வரவேண்டிய கடமை அல்ல

அ) வங்கியாளர் ஆ) பங்குதாரர்கள்

இ) முகவர் ஈ) பொறுப்பாண்மையாளர்கள்

9 கம்பெனி சட்டப்படி இயக்குனர்கள்____ மூலம் நியமிக்கப்படவேண்டும்

அ) மத்திய அரசு ஆ) கம்பெனி சட்ட வாரியம்

இ) கம்பெனியின்ஆண்டு பொதுக்கூட்டம் ஈ) இயக்குனர்கள் குழு

10 இயக்குனர்கள் குழு தனது அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வகையான இயக்குனர்களை நியமனம் செய்யலாம்

அ)கூடுதல் இயக்குனர்கள் ஆ) சாதாரணமாக ஏற்படும் காலி பணியிடத்தை நிரப்புதல்

இ) மாற்று இயக்குனர்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–இ | 2–அ | 3–ஈ | 4–இ | 5–இ | 6–ஆ | 7–அ | 8–ஈ | 9–இ | 10–ஈ |

## 28. நிறுமச் செயலர்

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. நிறுமத்தின் செயலர் அந்த நிறுமத்தின் ஓர்___________ ஆவார்.

அ) உறுப்பினர் ஆ) இயக்குனர்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

இ) தன்னிச்சையான ஒப்பந்ததாரர் ஈ) ஊழியர்

2. யார் ஒருவர் நிறுமத்தின் செயலாளராக முடியும்
அ) தனிநபர் ஆ) கூட்டாண்மைநிறுமம்
இ) கூட்டுறவு சங்கம் ஈ) தொழிற்சங்கம்

3. ____________கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.
அ) சட்டமுறை ஆ) ஆண்டுப்பொதுக்கூட்டம்
இ) சிறப்பு ஈ)வகுப்பு

4. இயக்குநர் கூட்டம் ஆண்டுக்கு குறைந்தது ____________ முறைகள்கூட்டப்படவேண்டும்.
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

5. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ________ க்கு பேச உரிமைஇல்லை.
அ) தணிக்கையாளர் ஆ) பங்குநர்
இ)பகராள் ஈ)இயக்குனர்

6. சட்டமுறைகூட்டத்தை_______ நிறுமம் கூட்டத்தேவையில்லை.
அ) பொது ஆ) தனி வரையறு
இ)பொது வரையறு ஈ) பங்குமுதல் மற்றும் உத்தரவாதமுடைய

7. நிறுமம் பதிவு செய்யப்பட் நாளிலிருந்து ______ மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
அ) 12 ஆ) 15 இ) 18 ஈ) 21

8. ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்ற--------- சதவித பங்குனர்கள் வாக்களிக்கவேண்டும்.
அ) அனைத்து ஆ) 90% குறையாமல்
இ)75% குறையாமல் ஈ)50% மேல்

9. ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறுமபதிவாளரிடத்தில் _______ நாட்களுக்குள் பதிய வேண்டும்.
அ) 7 ஆ) 14 இ) 30 ஈ) 60

10. சிறப்பு தீர்மானம்__________க்கு தேவைப்படுகிறது.
அ) கடனீட்டுப்பத்திரத்தைமீட்க ஆ) பங்காதாயம் அறிவிக்க
இ)இயக்குநரை பணியமர்த்த ஈ) தணிக்கையாளரை பணியமர்த்த

விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1–அ | 2–அ | 3–அ | 4–இ | 5–இ | 6–ஆ | 7–ஆ | 8–இ | 9–இ | 10–அ |

**PREPARED BY**

**G.PRAKASH. M.COM.MPHIL.B.ED.D.TED.**

**GUGAI HR.SEC.SCHOOL. SALEM 6**

**9488270034**